**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.83/2022**

Date: 03.09.2025.
வா.சா.4 - திரு. பனிபிச்சை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சாட்சி ரூபின் டெல்லஸ் யை எனக்கு தெரியும். அவருடைய அப்பா பெயர் சேசையன் என்றால் சரியல்ல, அவருடைய அப்பாவை நாங்கள் தாசன் என்று அழைப்போம். 2ம் பிரதிவாதி ஆன்டினி சுனில் என்பவர் 1ம் வாதி கிறிஸ்துராணியின் மகன் என்றால், சரிதான். எனது உடன் பிறந்த அக்கா பெயர் பெல்சிட், அவரின் மகள் பெயர் ரோஜா. ரோஜாவை, 2ம் பிரதி ஆன்டனி சுனில் திருமணம் செய்திருக்கிறார் என்றால், சரிதான். நாங்கள் அனைவரும் குடும்ப உறுப்பினர்கள் என்றால், சரிதான். இவ்வாறு எங்களுடைய உறவு முறை பற்றி நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். நான் ஜேம்ஸ் நகரில், சிவந்த மண் டவர் என்ற இடத்தில் குடிவசித்து வருகிறோம் என்றால், சரிதான். நான் அந்தோணியர் தெரு, ஏசுநாதர் காலணியில் குடியிருப்பதாக எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால், சரிதான். எங்கள் ஊரில் வழக்கமாக தெரு கமிட்டி என்ற குழு உள்ளது என்றால், சரிதான். அந்த கமிட்டியின் மூலமாக இரண்டு வீடுகளுக்கு இடையே பிரச்சனைகள் ஏற்பட்டால் ஆவணங்களை பார்த்து சுமூகமான தீர்வு செய்துவைப்பது வழக்கம் என்றால், சரிதான். இந்த வழக்கிலும் தாசன் என்பவர் அவரின் வீட்டு மேற்கு பக்க சுவரை பூசும்போது ஏற்பட்ட பிரச்சனைக்கு பிரதிவாதி தரப்பில்

தெரு கமிட்டியிடம் மனு கொடுத்து, இருதரப்பினரையும் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால், கிறிஸ்துராணியின் 2 வது மகன் மனு கொடுத்தார். மனு கொடுத்த நபரிடம் அவருடைய சொத்து தொடர்பான ஆவணங்களை கொண்டு வர சொல்லியும், வாதிகள் தரப்பில் உரிய ஆவணங்களை அவர்கள் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. அவ்வாறு அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றிய விபரங்கள் என்னால் சொல்ல இயலாது. வாதிகள் ஆவணம் எதையும் தாக்கல் செய்யாத காரணத்தினால் தெரு கமிட்டியில் எந்த தீர்வும் எடுக்க இயலவில்லை என்றால், சரியல்ல. எங்கள் ஆலயத்தில் பங்கு தந்தையின் தலைமையில் சமாதான குழு ஒன்று உண்டு என்றால், சரிதான். அந்த சமாதான குழுவில் நான் உறுப்பினர் இல்லை. அந்த சமாதான குழுவில் உறுப்பினராக இருக்கும் நபர்களுக்கு தான்,மனு யார் கொடுத்தது என்ற விபரங்கள் பற்றி தெரியும் என்றால், சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுக்குமாறு நான் சொன்னதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அவ்வாறு யார் மீது எந்த தேதியில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்திற்கு கிறிஸ்துராணியின் மகன் சொல்லி தான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். இந்த வழக்கு பற்றிய விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், வாதிகளும் , 2, 3 பிரதிவாதிகளும் எனது குடும்ப உறுப்பினர்கள் என்ற காரணத்தினால் நான் உண்மை விபரங்களை மறைத்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால், சரியல்ல. வழக்கு பற்றிய விபரங்கள் தெரியாத காரணத்தினால் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.